

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life | NUH National University Hospital — A member of the NUHS | Alexandra Health | Eastern Health Alliance | Jurong Health | SingHealth

SINGHEALTH / PIL / T110R0

நோயாளி தகவல் கையேடு

# அல்செய்மர் நோய்க்கான மருந்துகள்

## (MEDICATIONS FOR ALZHEIMER'S DISEASE)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

அல்செய்மர் (Alzheimer) நோய்க்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள், கோலினெஸ்டெரேஸ் தடுப்பிகள் (cholinesterase inhibitors) என்றழைக்கப்படும் மருந்துப் பிரிவைச் சேர்ந்தவை. நம் ஞாபக சக்திக்கும் சிந்தனைத் திறனுக்கும் முக்கியமாகத் தேவைப்படும் அசிடைல்கோலின் (acetylcholine) என்ற இரசாயனப் பொருள் சிதைவதை இம்மருந்துகள் தடுக்கின்றன. அசிடைல்கோலினை உற்பத்தி செய்யும் உயிரணுக்கள் தொடர்ந்து சேதமடைந்தோ, அல்லது அழிந்தோ வந்தாலும்கூட, இந்த மருந்துகள் இந்த இரசாயனப் பொருளின் அளவை உயர்த்தி வைத்திருக்க உதவுகின்றன. அல்செய்மர் நோய் சிறியதிலிருந்து நடுத்தரமாகப் பாதித்த நோயாளிகளுக்கு இம்மருந்துகள் நன்றாகப் பலனளிக்கின்றன.

இந்தப் பிரிவில் பின்வரும் மருந்துகள் அடங்கும்:

- டோன்பெசில் (Donepezil)
- ரைவாஸ்டிக்மைன் (Rivastigmine)
- காலன்டமைன் (Galantamine)

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

**டோன்பெசில்**

இந்த மருந்தை ஒரு நாளைக்கு ஒரு முறை, இரவில் உறங்கச் செல்வதற்குச் சற்று முன்பாக உட்கொள்ள வேண்டும்.

**ரைவாஸ்டிக்மைன் & காலன்டமைன்**

இந்த மருந்துகளை மருத்துவர் கூறியபடியே எடுக்க வேண்டும். மருந்தின் அளவு ஒவ்வொரு நோயாளிக்கும் வேறுபடலாம். மருந்தை உணவுடன் எடுக்க வேண்டும்.

இந்த மருந்துகள் பலனளிப்பதற்கு, இவற்றை நீண்ட காலத்திற்கு நாள்தோறும் ஒழுங்காக எடுத்துவர வேண்டும். மருத்துவர் இந்த மருந்தை சிறு அளவில் ஆரம்பித்து, பிறகு உங்களின் தேவைக்கேற்ப அதைப் படிப்படியாக உயர்த்துவார்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

மருத்துவர் கூறுவதுபோலவே மருந்தை உட்கொள்ள வேண்டும். எனினும், ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே எடுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை அதற்குரிய நேரத்தில் எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

இந்த மருந்துகளினால் குமட்டல், வாந்தி, வயிற்று வலி, பசியின்மை மற்றும் அடிக்கடி மலம் கழித்தல் போன்ற பக்க-விளைவுகளை எதிர்பார்க்கலாம். தலைவலி, கிறுகிறுப்பு, களைப்பு, உடல்சோர்வு மற்றும் தவிப்பு போன்ற பக்க-விளைவுகளும் ஏற்படலாம். சில நோயாளிகள் சிகிச்சையின் ஆரம்பத்தில் அதிகக் கலவரப்பட்டுக் காணப்படலாம், ஆனால் அடுத்த சில வாரங்களில் இது குறைந்துவிடும்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்துகள் மந்த நிலையை ஏற்படுத்தலாம். எனவே, வாகனம் ஓட்டாதீர்கள் அல்லது இயந்திரங்கள் இயக்காதீர்கள்.

மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கேட்காமல் வேறு எந்த மருந்துகளையும் உட்கொள்ளாதீர்கள். குறிப்பாக, கடைகளில் வாங்கக்கூடிய ஆஸ்பிரின் அல்லது இபுப்ரோ.ஃபென் (ibuprofen) போன்ற வலி நிவாரணிகளையும், சளி, இருமல் மருந்துகளையும் உட்கொள்ளாதீர்கள்.

குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி அல்லது பசியின்மை இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள்.

மருத்துவரிடம் வழக்கமாகச் சென்று நோயைச் சோதித்துக் கொள்வது மிக முக்கியம். நோய் மோசமடைந்தால் அல்லது புது அறிகுறிகள் தோன்றினால் அதை மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

## மருந்தை நான் எப்படிப் பாதுகாக்க வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.